தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதி பாகம் எண் 42ல் இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை கழக மாணவர் அணிச்செயலாளர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் தென்காசி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ராஜா ஈஸ்வரன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தார்கள். இதில் ஏராளமான கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர்.

திருவாரூர் மாவட்டம் பணியின்போது உயிரிழந்த

பெருகவாழ்ந்தான் காவல் உதவி ஆய்வாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 10 - திருவாரூர் மாவட்டத்தில் பணியின் போது மயங்கி விழுந்து உயிரிழந்த பெருகவாழ்ந்தான் காவல் நிலைய உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த M.ராஜேந்திரன் (வயது 52) என்பவர் கடந்த 5.4.2025 அன்று பணியின் நிமித்தமாக மண்ணுக்குமுண்டான் கிராமத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக மயக்கமடைந்து சிகிச்சைக்காக அருகிலுள்ள சித்தமல்லி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

ராஜேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உற வினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முப்பது இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ரிஷிவந்தியம் தொகுதி

ஈருடையாம்பட்டு 110/11 கே.வி துணைமின் நிலையம் அமைக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

சென்னை,ஏப்.10- தமிழக சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **வசந்தம் க. கார்த்திகேயன் கோரிக்கை** வைத்து பேசியதாவது: ரிஷிவந்தியம் தொகுதி மூங்கில்துறைப்பட்டு, பொரசப்பட்டு, பெருவலூர், இளையாங்கன்னி ஆகிய கிராமங்களுக்கு திருவண்ணாமலை மாவட்டம், பெருந்துறைப்பட்டு எஸ்.எஸ்.யில்

இருந்து திருவண்ணாமலை மாவட்ட எல்லையான வாழவச்சனூர் வழியாக தென்பெண்ணை ஆற்றை கடந்து மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, மழை வெள்ள காலங்களில் ஆற்றின் குறுக்கே செல்லும் மின் கம்பிகள் துண்டிக்கப்படுவதுடன் நீண்ட தூரத்தில் இருந்து மின் விநியோகம் செய்யப்படுவதால் பெரும்பாலான நாட்கள் இப்பகுதியில் மின்சார தாழ்வு நிலை உள்ளதாகவிவசாயிகளும், பொதுமக்களும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

திராவிட மாடல் நல்லாட்சியில் திறந்து வைக்கப்பட்ட ஈருடையாம்பட்டில் துணைமின் நிலையம் இயங்கி வருகிறது. மேற்கண்ட துணைமின் நிலையத்தில் இட வசதியும் இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு 110/11 கே.வி திறன் கொண்ட மின் மாற்றி அமைத்தால் இப்பகுதியில் உள்ள தாழ்வழுத்த மின் விநியோகம் சீரடையும். பொரசப்பட்டு ஊராட்சியில் மேட்டு கொள்ளை, வடக்கு தெரு, கங்கை அம்மன் கோயில் தெரு வழியாக 100க்கும் மேற்பட்ட விவசாய பம்பு செட்டுகளுக்கு உயர் அழுத்த மின் சாரம் செல்லும் கம்பிகள் தாழ்வாக செல்கிறது. இங்கு மின் பாதை அமைத்து தர வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்து **மின் சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பேசியதாவது**, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 2 துணை மின் நிலையங்கள், ரிஷிவந்தியம் தொகுதியில் துணை மின்நிலையம் தரம் உயர்த்த முதல்வர் அனுமதி வழங்கி உள்ளார். வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சுட்டிக்காட்டக் கூடிய ஆற்று பகுதியில் செல்லக்கூடிய அந்த வழித்தடங்களை மாற்றி புதிய துணை 4 மின் நிலையம் அமைத்து அங்கிருந்து மின் விநியோகம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். துறையின் அலுவலகத்துக்கு எடுத்து சொல்லி ஆய்வு செய்து திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிதி நிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும். ரிஷிவந்தியம் தொகுதியின் மின் தேவையை கவனத்தில் கொண்டு தமிழக முதல்வர் வழி காட்டுதலோடு ஏற்கனவே 194 புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வசந்தம் கார்த்திகேயன் எம்எல்ஏ சுட்டிக்காட்டிய பகுதியில் இரண்டு ஒரு நாட்களில் துறையின் அலுவலர்கள் சென்று ஆய்வு செய்து அதறகான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இளம்பரிதி

ஏப்ரல் 10 (1995)



பழம்பெரும் இயக்கத் தோழர், சென்னை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்.

"சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்து அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றைக்கும் மறக்கக்கூடியவை அல்ல! தமிழகம் முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் சுற்றுப்பயணம் செய்து இந்த இயக்கத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தியவர்" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1988ஆம் ஆண்டு முப்பெரும் விழாவின்போது தலைமைக் கழகச் சார்பில் பெரியார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் கிழக்கு மாநகர பொன்மலை பகுதி திமுக சார்பில் மாஜி ராணுவ காலனி மெயின் ரோட்டில் நடைபெற்றது. இ.எம்.தர்மராஜ் தலைமை தாங்கினார். சுப்பிரமணி வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் பனைமரத்துப்பட்டி ராஜேந்திரன், மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். எஸ்.துரை நன்றியுரையாற்றினார். இக்கூட்டத்தில் கே.என்.சேகரன் செங்குட்டுவன் மூக்கன், லீலாவேலு, நூர்கான், பொன்செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேலூர் தொகுதி வேலப்பாடியில் உள்ள

தர்மராஜர் - திரௌபதியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படுமா?

சட்டப் பேரவையில் வேலூர் தொகுதி – ப.கார்த்திகேயன் கேள்வி!

சென்னை, ஏப்.10- சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பதிலும் வருமாறு:-

ப. கார்த்திகேயன்: வேலூர் தொகுதி, வேலப்பாடி, அருள்மிகு தர்மராஜர் மற்றும் திரௌபதி யம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய திரௌபதியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.2.58 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது 25 சதவிகித பணிகள் முடிவுற்றிருக்கின்றன. இந்த ஆண்டு செம்படம்பர் மாதத்திற்குள் மீதமுள்ள பணிகள் முடிவுற்று, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. கார்த்திகேயன்: நம்முடைய முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் திரௌபதியம்மன் கோயில், அமைச்சர் அவர்கள் அன்றைக்கு பேசும்போது அதை Lifting முறைமூலம் சீரமைத்துத் தருவதாக சொன்னார்கள். அதிகமாக பழுதடைந்ததிருப்பதன் காரணத்தால், அதை எடுத்துவிட்டு கருங்கல் திருப்பணிமூலம் 40,000 கட்டுக் கல்லைப் பயன்படுத்தி சாலை உயரத்திற்கு நான் அமைத்துக்கொடுத்திருக்கிறேன்; எனது சொந்தச் செலவில் செய்திருக்கிறேன். அப்பணி மேற்கொண்டு நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், வேலப்பாடி ஆரணி சாலையில் உள்ள வரசித்தி விநாயகர் கோயில் 100 ஆண்டுகளுக்குமேல் பழமைவாய்ந்த கோயில். அங்கும் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கும் நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நடைபெறும் குடமுழுக்கு விழா அனைத்திலும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதா என்று கேட்டு அமர்கிறேன், நன்றி.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: வரசித்தி விநாயகர் திருக்கோயிலை பொறுத்தளவில், 27 பணிகள் ரூ.33 இலட்சம் செலவில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அங்கு திருப்பணிகள் முடிவுற்று, குடமுழுக்கு நடைபெறும். அவர் தமிழிலே குடமுழுக்கு நடைபெறுகிறதா என்று கேட்டார். 23 திருக்கோயில்களில் இன்றைக்கு குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட உத்தரகோசமங்கை கோயில், நம்முடைய மருதமலை போன்ற மூன்று கோயில்களிலும், 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 5 கோயில்களிலும் இன்றைக்கு குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கின்றன. 115 ஓதுவார்கள் உட்பட, 350க்கும் மேற்பட்ட ஓதுவார்கள் இன்றைக்கு 22 திருக்கோயில்களில் தமிழ் திருமுறைப்பாடி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற வகையிலே குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு மட்டும் பார்த்தால் திருவண்ணாமலை திரௌபதியம்மன் கோயிலில் ஓம் சக்தி என்று குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மருதமலையில் பார்த்தால் அரோகரா என்ற கோஷத்தோடு குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திண்டுக்கல் பெருமாள் திருக்கோயிலில் நமோ நாராயணா என்ற கோஷத்தோடு இன்றைக்கு குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல், முதல் சிவன் கோயிலான உத்தரகோசமங்கை என்ற சிவன் கோயிலில் சிவ சிவ என்ற கோஷத்தோடு, இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழகத்திலும் எங்கு பார்த்தாலும் தெய்வ கோஷங்களோடு திருமறை, திருப்புகழோடு குடமுழுக்கு நடக்கின்ற ஒரு ஆன்மிக ஆட்சியாக இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்கு, தமிழ், தமிழ் என்று அனைத்து திருக்கோயில்களிலும் தமிழ் மந்திரம் ஓதப்படுகிறது என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. கார்த்திகேயன்: எங்களுடைய வேலூர், அண்ணா சாலையில் மண்டல அலுவலகம் ஓர் ஆண்டுக்குமேல் கட்டப்பட்டு வருகிறது. மண்டல அலுவலகம் தனியார் இடத்தில் வாடகை கட்டடத்தில் செயல்படுகிறது. அதை முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் கோயில்களை எல்லாம் மூடி விடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குப் பார்த்தால் நம் தமிழ் கடவுள் முருகருக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் முதல மைச்சர் அவர்கள் பழனியில் மாநாடு நடத்தினார்.

இதை எல்லாம் பார்த்தால், சிவராத்திரியில் பார்த்தீர்களென்று சொன்னால், திருவண்ணா மலையில்உள்ள9திருக்கோயில்களில் மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, காலை ஆறு மணி வரை பல்வேறு இசைக் கச்சேரிகள் நடைபெறும். அதேபோல, நம்முடைய கோயில்களுக்கு காணிக்கையாக தங்கம் செலுத்துகின்றபோது, அவற்றை உருக்கி bankல் deposit செய்து, கோயில்களுக்கு வருமானம் வர செய்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். அதேபோன்று, பார்த்தீர்களென்று சொன்னால், அன்னதானத் திட்டம். கடந்த 10 ஆண்டு காலங்களில் 2 கோயில்களில்தான் நடைமுறைப்படுத்தினார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றப் பிறகு நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 11 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை அமல்படுத்தி, 13 திருக்கோயில்களுக்கு இன்றைக்கு முழுநேர அன்னதானத் திட்டம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதேபோன்று, 25 கோயில்களுக்கு முழுநேர பிரசாதம். முன்பெல்லாம் திருப்பதிக்கு சென்றால்தான், ஏதோ ஒரு பிரசாதம் நிச்சயமாகத் தருவார்கள். அதேபோன்று, தமிழ்நாட்டில் 25 கோயில்களுக்கு உள்ளே சென்று வெளியே வந்தால் லட்டு, சர்க்கரைப் பொங்கல் உள்ளிட்ட ஏதாவது ஒரு பிரசாதம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்களின் அரசு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: வேலூருக்கு இணை ஆணையாளர் அலுவலகம் கேட்டார். 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 55% பணிகள் முடிவுற்று, செப்டம்பர் மாதத்திற்குள் அந்த இணை ஆணையாளர் அலுவலகம் திறக்கப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 8 இணை ஆணையாளர் அலுவலகங்களில், நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களில் 2 இணை ஆணையாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதம் 6 இணை ஆணையாளர் அலுவலகம் இந்த ஆண்டு இறுதிக்குள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நம்முடைய உறுப்பினர் அவர்கள் பெரிய பக்திமான். சொந்தமாக அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் சொந்தப் பொறுப்பிலே நடத்திக் கொண்டிருக்கின்றார். பல்வேறு திருப்பணிகளுக்கு, இந்து சமய அறநிலையத் துறைக்கு உதவியாக இருக்கின்றார். ஆகவே, அவர் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளும் ஆண்டவன் முன்னிலையில் இந்த ஆட்சி நிச்சயம் நிறைவேற்றித் தரும் என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தமிழக ஆளுநரின் மக்கள் விரோத செயல்பாடுகளை கண்டித்து உச்சநீதிமன்றம் வழங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வரவேற்றும் முதல்வருக்கு நன்றி தெரிவித்தும் தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசுகி தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. உடன் ஆர்.பி.ஏழுமலை, டாக்டர் வி.எஸ்.விஜய், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், சி.எல்.ஞான சேகரன், மா.ப.அன்புநிதி, சி.சந்திரசேகரன், வேலூர் ஜி.ரமேஷ், முன்னாஷெரிப், தேவநேசன், ஆர்.பி.இ. சசிகுமார், எம்.ஏ.கணேஷ் சங்கர், எஸ்.தயாள்ராஜ், எஸ்.சத்திய மூர்த்தி, சி.எம்.தங்கதுரை மற்றும் பலர் உள்ளனர்.